ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2310/33 - 2022 දෙසැම්බර් මස 15 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.12.15

*2310/33 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல்கள்

*(அரசிறை பாதுகாப்பு கட்டளை இல. 05/2022)*

*சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) பிரிவு 10 இன் கீழான பின்வரும் தீர்மானமானது பாராளுமன்றத்தினால், 2022, திசெம்பர் 08 ஆம் திகதிய அதனது பொது அமர்வில் நிறைவேற்றப்பட்டது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.*

**கே. எம். மஹிந்த சிறிவர்தன,**
செயலாளர்,
நிதி, பொருளாதார உறுதிப்பாடு
மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு.

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு*
*மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2022, திசெம்பர் 15.*

**அட்டவணை**

*சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 325) அட்டவணை 'அ' இன் கீழான பின்னிணைப்பு II இல் புதிய வரையறை விலக்குகளின் பட்டியலில் (இறக்குமதி) இல. 42 இனை இணைப்பதன் மூலம் 2021 மாச்சு 24 ஆம் திகதிய 2220/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட இத் தீர்மானம், வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து வலுப்பெறுமாறு இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.*

*42. மாதவிடாய்க் கால சுகாதார துணிகள் உற்பத்தி செய்யும் சுதேச உற்பத்தியாளர்களினால் கைத்தொழில்துறை அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில், மற்றும் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன் இறக்குமதி செய்யப்படும், இ. மு. குறியீடுகள் 3920.10.20 (பொலிஎதைலின் படலங்கள் - உலோகமாக்கப்படாத, 110 மி. மி. இனை விட அதிகமாக ஆனால் 230 மி. மி. இற்கு மேற்படாத), 3920.10.90 (பிற - பொலிஎதைலின் படலங்கள் (டபிள்யூ) மற்றும் 3926.90.99 (பிற - பொலிபுரோப்பைலின் படலங்கள்) கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள மூலப்பொருட்கள் அல்லது இடைநிலைப்பொருட்கள்.*

EOG *12-0276*

1A - G 38396 — 41 (2022/12)

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*